# திராவிடத்தால் வாழ்கிறோம்

915

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

22



# சுயமரியாதைக் கொடி உயர்த்திய இஸ்லாமியர்கள்!

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

“நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர்” என பெரியாரைக் குறிப்பிட்ட பேரறிஞர் அண்ணா, பெரியாரைச் சந்திப்பதற்கு முன்பே சமதர்ம, சுயமரியாதைச் சிந்தனைகளைக் கொண்டிருந்தவர் என்பதை அவர் தொடக்கக் காலத்தில் நட்பு பாரட்டியவர்களிலிருந்தே அறியலாம். பெரியாருடன் இணைவதற்கு முன்பிருந்தே இஸ்லாமியர்களுடன் நெருக்கம் காட்டி வந்தவர் அண்ணா. காஞ்சிபுரத்தில் ஒலிமுஹம்மதுப்பேட்டையில் இஸ்லாமிய நண்பர்களுடனும் இஸ்லாமிய மார்க்க பேரறிஞர்களான ஆலிம்களுடனும்தான் அண்ணா தனது இளமைக் காலத்தைக் கழித்துள்ளார்.

“என்னுடைய பொதுவாழ்வு சுடர்விட, என்னுடைய இதயமூச்சின் இலட்சிய மேடையான திராவிடர் கழக மேடையுடன், மீலாது நபி விழா மேடையும் எனக்குக் கைக்கொடுத்ததை நான் மறந்து விட முடியாது. நானும் எனது கொள்கையும், சொல்லி வந்த சமுதாய சீர்திருத்தப் பிரச்சார பலத்துக்கு, பெருமான் நபிகள் நாயகத்தின் ஏக தெய்வக்கொள்கை எங்கட்கு பெரிதும் பிரச்சாரத் துணை நின்றது” என மீலாது நபி விழா மேடையில் நினைவு கூர்ந்திருக்கிறார் அண்ணா.

1957-க்கு முன்பாகவே சுமார் 300-க்கும் மேற்பட்ட மீலாது நபி விழாக்களில் பங்கேற்றுப் பேசியிருக்கிறார். ‘இன இழிவு நீங்க இஸ்லாம் மருந்து’ என்ற பெரியாரின் பார்வையில் இருந்து விலகாமல் இஸ்லாத்தை அணுகினார் . இன்னும் சொல்லப்போனால் இஸ்லாம் உலகத்திற்கான மதம் என்று பரந்துபட்ட பார்வையில் அணுகியவர் அண்ணா. அதுவும் “இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும், எல்லா நாட்டினருக்கும் பொருந்திய மதமாக அமைந்திருக்கிறது. பிற மதங்களிலே அற்புதங்கள் அதிகம்; அடிப்படை உண்மைகள் குறைவு. இஸ்லாத்திலே அடிப்படை உண்மைகள் அதிகம்; அற்புதங்கள் குறைவாகவேயுள்ளன. வாளால் பரப்பப்பட்ட மதம் என்ற கூற்றும் உண்மை அல்ல” என்ற அண்ணா, அதற்கான காரணங்களையும் அவருக்கே உரிய இலக்கிய நடையில் சிலாகித்திருக்கிறார்.

## பலாச்சுளையும் இஸ்லாமும்!

“பலாச்சுளையை சுவைக்க முற்படுவோர், முதலில் மேல் தோலை நீக்கி, பிசிறுகளைக் களைந்துவிட்டு, பிறகு சுளையை எடுத்து அதிலுள்ள கொட்டைகளையும் நீக்கிவிட்டே தின்பார்கள். அதுபோன்றே மதக்கருத்துகளையும் உணரவேண்டும். சிலர் பலாப்பழத்தின் முன்தோலையே மதம் என்கிறார்கள். அவர்களுக்காகப் பரிதாபப்படுகிறோம். சிலர் பிசிறுகளை ஒட்டிக்கொண்டு மதம் என்று அலைகிறார்கள். அவர்களைக் கண்டால் நமக்கு அருவருப்பாக இருக்கிறது. மற்றும் சிலர் கொட்டையுடன் பலாச்சுளையை விழுங்க முற்படுகிறார்கள். அவர்களைக் கண்டு அனுதாபப்படுகிறோம். ஆனால் உரித்தெடுத்த பலாச்சுளையைப் போன்றதுதான் இஸ்லாம்” என்று மீலாது நபி விழா ஒன்றில் உரையாற்றி உள்ளார் அண்ணா.

‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற அண்ணாவின் முழக்கத்திற்கு மிக நெருக்கமான மார்க்கமாக இஸ்லாம் இருந்ததும் தி.மு.க.-வுக்கும் இஸ்லாமியர்களுக்குமான இணைப்பை இயற்கையாகவே பலப்படுத்தியது.

1957-இல் மீலாது நபி விழா நிகழ்ச்சியில் இதுபற்றி பேசிய அண்ணா, “இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற நெறி, தமிழ்நாட்டில் பரவியிருந்தது. ஆனால், பாதகர்களாலும் காதகர்களாலும் அந்த நெறி மறைக்கப்பட்டிருந்த நேரத்தில் இஸ்லாம் அந்த நெறியை எடுத்துரைத்தது. எனவே, காணாமல் போன குழந்தையைத் தாய்ப்பாசத்துடன் கட்டியணைப்பதைப் போன்றே தமிழகத்தில் இஸ்லாமிய கருத்துகள் தழுவப்பட்டன” என்று பேசியுள்ளார்.

மேலும், “20, 25ஆண்டுகளுக்கு முன்பு கேட்டார்கள் - ‘முகம்மது நபி விழாவிலே அண்ணாதுரை கலந்து கொள்ளலாமா’ என்று! ஆனால், இப்பொழுது கேட்பதில்லை. எனக்கும் இஸ்லாமியர்களுக்கும் ஏற்பட்ட தொடர்பு இன்று நேற்றல்ல, 30 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டிருக்கிறது. ஆண்டவனுக்கு உருவம் கொடுத்து, அதற்குப் பூசை செய்து, பிறரை ஏமாற்றும் எண்ணம் கூடாது. அந்த வகையிலே, பார்த்தால் நானும் இஸ்லாமியன்தான். ஆனால், நான் இஸ்லாமிய ஜமாத்திலே இல்லை. நான் இஸ்லாத்தில் சேர்ந்து அதன் பிறகு பாராட்டுவதிலே அருமை பெருமை இல்லை. என் வீடு மிக நல்ல வீடு என்று நானே எடுத்துச் சொல்வது எப்படிச் சரியில்லையோ, அதைப் போலத்தான் அது அமையும். என் வீட்டைப் பற்றி நான் பெருமைப்படுவதிலே ஆச்சரியமில்லை, ஜமாத்திலே சேராமலே இஸ்லாத்தின் நன்மைகளை எடுத்துச் சொல்வதில்தான் பெருமை” என்றார் அண்ணா.

> பெரியார் என்றால் பெரியார் மட்டுமல்ல, அவர்தம் தளபதி அண்ணாவையும், அண்ணாவின் தம்பி முத்தமிழறிஞர் கலைஞரையும் சேர்த்தே குறிக்கும்.

## கடல் கடந்தும்!

நபிகள் நாயகத்தின் பெருமையை இங்கு மட்டுமல்ல, கடல் கடந்து சென்றும் பேசியவர் அண்ணா. 1965-இல், சிங்கப்பூர், மலேசிய பயணத்தின்போது, தமிழ் முஸ்லிம்கள் அளித்த விருந்தில் அண்ணா கலந்துகொண்டார். அங்கு பேசும்போது, “தமிழர் நெறியும் இஸ்லாமும் ஒன்றே. பழந்தமிழகத்தினுடைய நெறியைத்தான் இஸ்லாம் என்று நாங்கள் கருதுகிறோம். அது அரபு நாட்டிலிருந்து நபிகள் நாயகம் அவர்களால் அருளப்பட்டதென்றாலும், வைதீக மார்க்கம் தமிழகத்திலே புகுவதற்கு முன்னால் சங்க காலத் தமிழகத்தின் வேர்களைப் பார்க்கின்ற நேரத்தில், இஸ்லாத்தில் எப்படிப்பட்ட சமூக அமைப்பு இருந்ததோ அப்படிப்பட்ட சமூக அமைப்பைத்தான் பழந்தமிழர்கள் விரும்பி இருந்திருக்கிறார்கள். இடைக் காலத்திலேதான் ஜாதிகளெல்லாம் ஏற்பட்டது. ஜாதிக்குள்ளே ஜாதி ஏற்பட்டது. இப்படிப் பல கேடுகள், தமிழ்ச் சமூகத்திலே பிற்காலத்தில் ஏற்பட்டன” என்று அங்கும் திராவிட மரபின் வேர் இஸ்லாத்தில் உள்ளதைச் சுட்டிக்காட்டினார் அண்ணா.

அந்த வேரை திராவிட இயக்கம் இன்னும் ஆழமான பிடிப்போடு கொண்டு, திராவிட இஸ்லாமியர்களை வளர்த்தெடுத்தது. அது மதத்தைத் தாண்டி, அரசியலைத் தாண்டி, கட்சிகளைத் தாண்டிய நட்பையும், தோழமையையும் கொண்டிருந்தது. குறிப்பாக, 1965-இல் தி.மு.க.-வின் பொதுக்குழுவில், ‘மதச் சிறுபான்மையினருக்காக ஒரு அணியை உருவாக்க வேண்டும்’ என்ற கோரிக்கை எழுந்தது. ஆனால், அறிஞர் அண்ணா “காயிதே மில்லத் தலைமையிலான முஸ்லிம் லீக் நம்மோடு தோழமையாக இருக்கும்போது, இது தேவையில்லை” என்று மறுத்துவிட்டார்.

அண்ணாவின் அந்த மறுதலிப்புக்கு, 1944-இல் திராவிட நாடு ஏட்டில் வெளியான ‘திராவிட நாடும் இஸ்லாமியர்களும்’ கட்டுரை நியாயம் சேர்க்கிறது. 06.08.1944 இதழில் பாஷா என்பவர் எழுதிய அந்த கட்டுரையின் இறுதி வரிகள் இவ்வாறாக முடிகின்றன. “எமது இஸ்லாமியத் தோழர்களுக்கு நமது வேண்டுகோள். திராவிடர் - இஸ்லாமியர் கொடிகளை இருகரங்களிலேந்தி பெரியார் ஈ.வெ.ரா.வைத் தளபதியாகக் கொண்டு, நமது உரிமைகளைப் பெற, இழந்த பாங்கான வாழ்வைக் காண, சுயமரியாதை வாளேந்தி வெல்லுவோம்” என்று இடிமுழக்கம் செய்தார் பாஷா.

பெரியார் என்றால் பெரியார் மட்டுமல்ல, அவர்தம் தளபதி அண்ணாவையும், அண்ணாவின் தம்பி முத்தமிழறிஞர் கலைஞரையும் சேர்த்தே குறிக்கும். அந்த முப்பெரும் அடையாளங்களால்தான் தமிழ்நாட்டில் இஸ்லாமியர்கள் ‘சுயமரியாதை வாள்’ ஏந்திய அடையாளம் பெற்றார்கள். இல்லாவிட்டால், வாளெடுத்து வந்த இனம் என்று வடக்கைப் போல இங்கும் நிறுவியிருப்பார்கள், அந்த முயற்சியை முறியடித்தவர்களில் அண்ணா முதன்மையானவர், முழுமையானவர்.

...நீளும்

## வேலைக்காகப் புலம்பெயர்ந்தது குற்றமா?

பீகாரில் அடுத்த சில மாதங்களில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், சிறப்புத் தீவிர திருத்தம் என்ற பெயரில் 60 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்களைத் தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளது. எங்கும் ஆதார், எதிலும் ஆதார் என்று எல்லாவற்றுக்கும் ஆதார்... ஆதார் என கட்டாயமாக்கியவர்கள், இந்தச் சிறப்புத் திருத்தத்தின்படி, தங்கள் வாக்காளர் உரிமையைத் தக்கவைத்துக்கொள்ள ஆதார் அட்டையைச் சான்றாகவே எடுத்துக்கொள்ளவில்லை. பாஸ்போர்ட், 1987-க்கு முந்தைய அடையாள ஆவணங்கள், தேசிய குடியுரிமைப் பதிவேடு என எளிதில் இல்லாத, கிடைக்காத ஆவணங்களைக் கட்டாயமாக்கியது தேர்தல் ஆணையம்.

வாக்காளர் உரிமையை இழந்தவர்களில் 35 லட்சம் பேர் புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் தொடர்புகொள்ள முடியாதவர்கள் என தேர்தல் ஆணையம் வரையறுத்துள்ளது. இதில் கொடுமை என்னவென்றால், இந்தப் புலம்பெயர்ந்தவர்களில் பலருக்கு, இப்படியொரு சிறப்புத் தீவிர திருத்தம் நடந்ததோ அல்லது தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதோ தெரியவே இல்லை. புலம்பெயர் தொழிலாளர்களுக்காக செயல்படும் SWAN அமைப்பு, இதுதொடர்பாக நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பல்வேறு மாநிலங்களில் பணிபுரியும் பீகாரைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் 338 பேர்களிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், இப்படியொரு திருத்தம் நடப்பதையே 90% பேர் அறியவில்லை. திருத்தத்திற்கான ஆவணங்களை ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஒரு சதவிகிதத்துக்கும் குறைவானவர்களுக்குத்தான் தெரிந்திருக்கிறது. இவர்களில் 35% பேரிடம் தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட எந்தவொரு ஆவணமும் இல்லை. ஆனால் 96% பேரிடம் ஆதார் அட்டை இருக்கிறது. 83% பேரிடம் வாக்காளர் அட்டை உள்ளது.

தற்போது, இந்த இரண்டு ஆவணங்களையும் ஏற்றுக்கொள்ள, உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இதை தேர்தல் ஆணையம் பரிசீலிக்க வேண்டும். ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதுதான் தேர்தல் ஆணையத்தின் பணியே தவிர, பா.ஜ.க.வுக்கு ஏற்றபடி வாக்காளர் பட்டியலை உருவாக்குவது அல்ல.

## ஃப்ளாஷ்பேக்



## கழக மாநாடு போல எங்கள் மணவிழா!



சு.செழியன்

26.01.1986 அன்று, இராணிப்பேட்டை நகர கழக முன்னாள் செயலாளரான என் தந்தையார் மறைந்த பி.சி.சுப்பிரமணி அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் தலைமை வகிக்க, கழக மாநாடுபோல எனது மணவிழாவை நடத்தினார். இராணிப்பேட்டை, ஜெயம் திரையரங்கில் நடைபெற்ற மணவிழாவுக்கு அன்றைய பொதுச்செயலாளர் இனமானப் பேராசிரியர் முன்னிலை வகித்தார். இன்றைய பொதுச்செயலாளர் அமைச்சர் அண்ணன் துரைமுருகன், முன்னாள் அமைச்சர் அண்ணன் ஆற்காடு வீராசாமி, அன்றைய ஒன்றுபட்ட வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் தி.அ.முகமதி சகி உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு எங்களை வாழ்த்தினார்கள். எனக்கும் என் இணையர் ஈஸ்வரிக்கும் எங்கள் மணவிழா, மறக்கமுடியாத கழகப் பொதுக்கூட்டமாகவே நினைவில் இருக்கும்.

**– சு.செழியன், கழக இலக்கிய அணி துணைத் தலைவர், இராணிப்பேட்டை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### குறைகூற முடியாத பட்டியல்!

1957-ஆம் ஆண்டு தேர்தலின்போது, கழக வேட்பாளர்களின் பட்டியலை எவரும் குறைகூறவோ, மறுக்கவோ முடியாத அளவில் இருந்தது. ஆனால், வாகன வசதியோ, பண வசதியோ, கழக வேட்பாளருக்குச் சராசரி அளவிற்குக்கூட இருக்கவில்லை. கூட்டங்கள், துண்டறிக்கைகள், தலைமை நிலையம் வெளியிட்ட கருத்தாழமிக்க சுவரொட்டிகளை மட்டுமே நம்பி, கழக வேட்பாளர்கள் ஜனநாயகக் கடமையில் ஈடுபட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131